விலை ரூபா 1-25

Branch Library


# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 18 ஷவ்வல் 23 இதழ் 141

யாழ்ப்பாணம் புதன்கிழமை 2-7-1986


## கைதானோரை விடுவிக்கக் கோரி

# திருகோணமலை ஆலயங்களில் தாய்மார் இன்று உண்ணாவிரதம்

[அலுவலக நிருபர்]

கைது செய்யப்பட்ட அப்பாவி இளைஞர்களை விடுவிக்கக் கோரி திருமலையை சேர்ந்த தாய்மார்கள் சகல ஆலயங்களிலும் இன்று பகல் பூராவும் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவுள்ளனர்.

அத்துடன் கைதுசெய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்க கோரி சகலதமிழ்பேசும் மாணவர்களும் திருமலையில் இன்று பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கப் போவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 14ம் திகதி திருமலை நகரைச்சுற்றிவளைத்த ஆயுதப்படையினர் பாடசாலை மாணவர்கள், அப்பாவி இளைஞர்கள், அரச, கூட்டுத்தாபன தனியார்துறை ஊழியர்கள் உட்பட பல ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

கைது செய்யப்பட்டவர்களுள் மாணவர்களுட்பட 497 பேர் பூஸா முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் 24 பேர் திருமலை கோட்டைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களுள் பலரைக்காணவில்லையென்றும் தாய்மார் புகார் செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்களையும், மாணவர்களையும், கணவன்மாரையும், உழைப்பாளிகளையும் பிரிந்து தவிக்கும் அன்னையர்களே இன்று அவர்களை விடுவிக்கக் கோரி உண்ணாவிரதம் இருக்க முடிவுசெய்துள்ளனர். (மா)

## பேச்சுக்கள் அவசியமானல்

# ஜனாதிபதியை த. வி. கூ. நேரடியாக சந்திக்கும்!

## தீயிடப்பட்டன!

(வவுனியா, செவ்)

வவுனியா நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக ஓலைகளினால் வேயப்பட்டிருந்த வாரச் சந்

(5ம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சி பேச்சுக்களுக்கு இடமில்லை!!- நீலன் கருத்து

(கொழும்பு)

"இலங்கை அரசின் புதிய யோசனைகள் குறித்து பேச்சுக்கள் எதனையும் தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்கொள்வதாயின் ஜனாதிபதி ஜெயவர்த்தனவை அது நேரடியாகச் சந்திக்கும். சர்வ கட்சி மகாநாடுகள் மூலம் பேச்சுக்கள் நடத்த கூட்டணி முன்வரமாட்டா" என்று த. வி. கூ. பிரமுகரான கலாநிதி நீலன் திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸி. க்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே கலாநிதி நீலன் திருச்செல்வம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வுகாணும் வகையில் இலங்கை அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய யோசனைகள் குறித்து இன்று புதன்கிழமை சென்னையில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆராயும். தமிழ்ப் போராளிகள் குழுக்களும் இதுகுறித்து இன்று கூடி முடிவெடுககவுள்ளன.

இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள ஆலோசனைகள் சமரச பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான அடிப்படை அம்சங்களாக விளங்கினாலும், அவை குறித்து பேச்சுக்களை நேரடியாக ஜனாதிபதியுடன்

(5ம் பக்கம் பார்க்க)

## வாகரையில் கண்ணிவெடி:

# 20 ராணுவம் பலி?

[அலுவலக நிருபர்]

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாகரை என்னுமிடத்தில் இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் 20 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 13 பேர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை 10-30 மணியளவில் மட்டக்களப்பு - திருமலை வீதியில் 10-வது மைல் கல்லில் வாகரை இராணுவ முகாமுக்கு அண்மையில் இக்கண்ணிவெடிச் சம்பவம் இடம்பெற்றது.

வீதியில் கண்ணிவெடி புதைக்கப்பட்டிருப்பதாகக்

(5ம் பக்கம் பார்க்க)

## டொலர் பாமிலிருந்து

# கால்நடையாக வந்த இராணுவம் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம் புதன்,

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள டொலர் பாம் இராணுவ முகாமிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கால்நடையாக சென்றபோது 'தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் எதிர்கொண்டுதாக்குதல் நடத்தினர்கள். இதனைத் தொடர்ந்து இருதரப்பினருக்குமிடையே நேரடிமோதல்இடம்பெற்றது.

நேற்று முன்தினம்காலை9-30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி 'தமிழீழ விடுதலைப்புலிகள்' அரசியல் பிரிவு வி த்துள்ள அறிக்கையில் மேலுல் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

(5ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவைக் கடப்பது:

# அனுமதிபெறுவதுகுறித்து வாகனக்காரர் குழப்பம்

யாழ்ப்பாணம், புதன்

ஆனையிறவைக்கடந்து செல்லும் வடபகுதி வாகனங்கள் பலாலி இராணுவமுகாமில் விசேட அனுமதிச்சீட்டுப்பெற வேண்டுமென்ற அறிவிப்பு பலவாகனச் சொந்தக்காரர்களை குழப்பத்திலாழ்த்தியுள்ளது.

ஆனையிறவைத் தாண்டிச் செல்லும் தனியார்பஸ்வண்டிகள், லொறிகள் உட்பட அனைத்து வாகனங்களும் நேற்று முதலாம் திகதி தொடக்கம் பலாலி இராணுவ முகாமில் அனுமதிச்சீட்டுப் பெற்றுக் கொண்டே

(5ம் பக்கம் பார்க்க)

## வல்வெட்டித்துறையில்

# முகாமிலிருந்து வெளிவந்த இராணுவம்மீது தாக்குதல்

வல்வெட்டித்துறை, செவ்

வல்வெட்டித்துறைராணுவமுகாமிலிருந்து நேற்று பிறபகல்இராணுவத்தினர்வெளிவந்தபொழுது 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கப் போராளிகள், சிலிண்டர், துப்பாக்கிகள் சகிதம் தாக்குதல் மேற்கொண்டனர்.

இத்தாக்குதல் சம்பவத்தின் போது பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் முகாமுக்குள் திரும்பிய இராணுவத்தினர் முகாமிலிருந்து கிராமப்புறங்களை நோக்கி 'ஷெல்'களை ஏவிவிட்டனர்.

'ஷெல்' தாக்குதலால் ஏற்பட்டுள்ள சேத விபரங்கள் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. [மா]

## வழிப்பறிக்கொள்ளை:

# யாழ். நகரில் இன்று கடையடைப்பு

யாழ்ப்பாணம் புதன்,

அண்மையில் இடம்பெற்ற கடத்தல்களையும், கொள்ளைகளையும் கண்டித்துஇன்று யாழ். நகரில் பூரண கடையடைப்பு நடைபெறவுள்ளது.

இக்கடையடைப்பு சம்பந்தமாக யாழ் வர்த்தக சங்கமும், முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியமும் இணைந்து "கடத்தலுக்கும், கொள்ளைக்கும் கண்டனம் தெரிவிப்போம்" என்னும் தலைப்பில் துண்டுபிரசுரம் ஒன்றை வெளிபிட்டுள்ளது.

அத்துண்டுப் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

எம் மக்களின் பாவனைக்காக பெரும்பாடுபட்டு பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும், வெளிநாடுகளில் உழைத்த பணத்தைப் பொருட்களாக

(5ம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர்

# திருமலை செல்லும் கப்பல் இன்று புறப்படும்

யாழ்ப்பாணம் புதன்

தற்போது யாழ். மாவட்டத்தில் தங்கியிருக்கும் திருகோணமலை அரச ஊழியர்கள் திருகோணமலைக்குச் செல்வதற்காக கப்பல் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் 'ஈழநாடு'க்குத் தெரிவித்தார்.

அக்கப்பலில் திருகோணமலைக்குச் செல்வதற்கு யாழ். அரச அதிபரிடம் பதிவுசெய்த 98 அரச ஊழியர்களும் இன்று [2-7-1986] பிற்பகல் 2 மணிக்கு முன் திரு. தனபாலசிங்கம் அவர்களை காங்கேசன் துறையிலுள்ள அவருடைய காரியாலயத்தில் சந்தித்துத் தங்கள் தேசிய அடையாள அட்டையையும் காண்பித்து மற்றும் பாதுகாப்புப் பரிசோதனைகளுக்குப் பின்னர் கப்பலுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படுமென்றும் இக்கப்பல் 3ந் திகதி வியாழக்கிழமை காலை திருகோணமலையைச் சென்றடையும் எனவும் கப்பலுக்குச் செல்ல வரும்போது ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையான தண்ணீரும உணவும் கொண்டுவர வேண்டுமெனவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். இக்கப்பல் இன்றுமாலை ஆறு மணிக்கு காங்கேசன்துறையை விட்டுப் புறப்படும். அதில் பயணஞ் செய்ய விரும்புவோர் அனைவரையும் நேரடியாக காங்கேசன் துறைக்கு வரும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ஷ)

## பல்கலைக்கழக அனுமதி

# யாழ். மாணவருக்கு வேண்டியபுள்ளிகள்!

(யாழ்ப்பாணம், புதன்)

யாழ். மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்கள் பெற்றிருக்க வேண்டிய ஆகக்குறைந்த மொத்தப் புள்ளிகளை பாடவிதானத்தின் அடிப்படையில் யாழ். பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

அப்புள்ளிகள் விபரம் வருமாறு: மருத்துவம் 251, பல் வைத்தியம் 247 மிருகவைத்தியம் 245, விவசாயம் 2?3, உயிரியல் விஞ்ஞானம் 218, பொறியியல் I 228, பொறியியல் II 220, பௌதீக விஞ்ஞானம் 180, முகாமைத்துவம் 244, வர்த்தகம் 228, சட்டம் 215, கலை 219. (பி)

## குண்டு மிரட்டல்:

# ரயில்சேவை சீர்குலைவு

கொழும்பு, செவ்வாய்

வட்டகொட ரயில்பாதையில் பிரதான மதகொன்றில் குண்டு வைக்கப்பட்டுள்ளது என கிடைத்த அநாமதேயச் செய்தியையடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை பல ரயில்

(5ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக் குண்டு. விபரங்களுக்கு: நா. சோதிலிங்கம், சைவ ஸ்கூல் லேன், திருநெல்வேலி. (C3173)

மட்டுவில் தெற்கில் மின் சார வசதிகளுடன் $7\frac{1}{2}$ பரப்புக் காணி விற்பனைக்குண்டு, தொடர்பு: இ. குபேந்திரன், மே/பா வே. தம்பித்துரை, மட்டுவில் தெற்கு, சாவகச் சேரி. (C 3201]

Sanyo கசற் றேடியோ விற் பனைக்கு உண்டு. No 58 சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் (C 3211)

சிறிய ஆட்டுக்கடா விற் பனைக்குண்டு. ஆ. சிவராசா, 6/2, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம், (C 3210]

3 மாதம் வயதுடைய 2 அல் சேஷன் சுத்த இனக்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: வோ. ரட்ணம். 22, சோம சுந்தரம் அவென்யு. சுண்டிக் குளி, யாழ்ப்பாணம். [C 3215

### சேவை

மின் விசிறி, மின் அடுப்பு. ரான்ஸ்போமர், மோட்டர் கிறைண்டர், வாசிங்மெஷின், ஸ்ராட்டர், றிப்சுவிச் ஆகியன உத்தாவாதத்துடன் திருத்த, றீவைண்டிங் செய்ய ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப் பாணம், (பழுதடைந்த மேற் குறிப்பிட்ட உபகரணங்கள் விலைக்கும் வாங்கப்படும்) (C- 3217)

### தேவை

ஆங்கில சுருக்கெழுத்து/ கட் டெழுத்தாளர் வேலை வெற் றிடம். சங்கானையில் இருந்து 3 மைல் சுற்று வட்டத்தில் வசிப்பவர்கள் பூரணவிபரங்களு டன் 10-7-86 ம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவும். செயலாளர் ஊற்றுநிறுவனம், மாரி அம்மன் ஒழுங்கை, திரு நெல்வேலி தெற்கு, யாழ்ப் பாணம். (C 3197

### 27 - வது பிறந்ததின வாழ்த்து



ஜொய்சி டேவிற்

வவனியாவைச் சேர்ந்த ஜொய்சி டேவிற் தனது 27-வது பிறந்ததினத் தைக் கொண்டாடுகிறார். இவரை பெற்றோர், சகோ தரர், நாரந்தனை வடக் கைச் சேர்ந்த மைத்து னர் ரவி ஆகியோர் நீடூழி வாழவாழ்த்துகிறார் கள்.

நாரந்தனை வடக்கு,
நாரந்தனை. C 3219

### பயிற்சி

நவாலி வை. எம் சீ.ஏ. நடாத்தும் தையல் வகுப்புக் களின் 4வது பயிற்சி நெறி 5-7-86 இல் ஆரம்பமாகிறது. பயிற்சி முடிவில் தராதரப் பத்திரங்கள் வழங்கப்படும் பயிற்சியில் பங்கு பற்றுவோர் பொதுக் காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும் [C 3214]

### வகுப்புகள்

Electronic Engineering [B Sc - 1st year Level, English Medium விண்ணப்ப முடிவுத்திகதி 05-07-86. தொடர்பு: Vispa Engineering Aid Hall [ஆனைப்பந்திச் சந் திக் கருகாமையில்], 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 3199]

Radio and T. V. (Antenna, Deck) வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம். English Typing புதிய பிரி வுகள் 05-07-86 இல் ஆரம்ப மகின்றன சர்வதேச அங்கீ காரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். வெளிநாடு செல்பவர்களுக்கு விரைவில் Courses முடிக்கப்படும். Vispa Engineering Aid Hall, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 3200)

### மணப்பந்தல்

இந்துவேளாள Doctor, என் சினியர் Accountants, M S.C. Lecturers மணமக்களுக்கு 23—32 வயதுக்கிடைப்பட்ட மணப் பெண்களும், அரசாங்க பிர தம லிகிதருக்கு குற்றமுள்ள ஆசிரியையும், அரசாங்க பியோன்களுக்கு மணப்பெண் களும் தேவை. எம்மிடம் எல்லா இன, மத மணமக்க கள் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட் டம், யாழ்ப்பாணம். C-3151

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றுபோன தம்பிப்பிள்ளை சண்முக சுந்தரம் என்பவரின் மரணசாதனமிலாச் சொத்துக்களின்நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயத் தில்.

மரணமெய்தியவர்.

இல. தத்துவம் /272

தம்பிப்பிள்ளை சண்முக சுந்தரம் கைம்பெண் நாக ராணி வரியப்புலம், சுன்னாகம்.

மனுதாரர்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மரணமெய்தியவரின் மரண சாதனமில்லாச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இந்த இலக் கம் கொண்ட விண்ணப்பம் இம்மன்றில் தாக்கல் செய்யப் பட்டு அதற்கமைய பின்னுறு திக் கட்டளையும் பதியப்பட் டுள்ளது.

இவ்விடயத்தில் அக்கறை யுள்ள எவரேனும் இம்மன்றில் 1986ம் ஆண்டு யூலை மாதம் 9ம் திகதி காலை 9 மணிக்கு தோன்றி மேற்கூறிய பின்னுறு திக்கட்டளையை ஏன் பூரணப் படுத்தக்கூடாது என்று தகுந்த காரணம் எதுவும் இருப்பின் அவற்றை இம்மன்றில் தெரி விக்குமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1986 ம் ஆண்டு யூன் மாதம் 26 ம திகதி.

மன்றின் கட்டளைப்படி,
**வி. இராமச்சந்திரஐயர்,**
பதிவாளர்,
மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்.

எம்மால் வரையப்பட்டது.
நடராசாவும்,
சபாநாதனும்,
மனுதாரரின் பதிவுபெற்ற
சட்டத்தரணிகள். (C 3212)

### கல்வி

23-2-86 இல் நடைபெற்ற பிற்மன் லண்டன் பரீட்சை யின் சுருக்கெழுத்து, தட் டெழுத்து மற்றும் பாடங்க ளின் பெறுபேறுகள், தராதரப் பத்திரங்கள் லண்டனிலி ருந்து ஏற்கனவே கிடைக்கப் பெற்றுள்ளோம். 86 ஆகஸ்ட் பரீட்சையின் விண்ணப்பமுடிவு 15-7-86 வெளி மாணவர்களும் தோற்றலாம். S. T. C. A. 631, கே. கே. எஸ். வீதி [மனோகராச் சந்தியிலிருந்து 100 யார்] யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தில் கிளைகள் இல்லை. (C 3204)

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

கந்தரோடை என்னு மிடத்தைச் சேர்ந்தவரும் காலஞ்சென்றவருமான செல்லத்துரை சண்முக தாஸ் என்பவரின் மரண சாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத் தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரீ/ 271

1. கந்தையா உலகநாதனின் பெண் அம்பிகையும்,
2. கந்தையா உலகநாதன். இருவரும் சந்நதி றோட், அச்சுவேலி

மனுதாரர்கள்.

எதிராக

1. காசிநாதர் கணபதிப் பிள்ளை பத்மநாதன் பெண் பகீரதியும்.
2. காசிநாதர் கணபதிப் பிள்ளை பத்மநாதனும், இருவரும் 23, ஸ்ரேசன் அவென்யு, வெள்ள வத்தை.
3. செல்லையா சிவமோகன் கைம்பெண் நிர்மலா தேவி, கந்தரோடை, சுன்னாகம்.
4. பொன்னுத்துரை நவரத் தினம் பெண் சாரதா தேவியும்.
5. பொன்னுத்துரை நவரத் தினம், இருவரும் கந்த ரோடை, சுன்னாகம்.
6. செல்லத்துரை செந்தி வேல், வட்டுக்கோட்டை மேற்கு. வ.
7. செல்லத்துரை கதிர்காம சோதி, கந்தரோடை, சுன்னாகம்.
8. செல்லத்துரை சிவசக்தி வேல், கந்தரோடை, சுன்னாகம்.

எதிர்மனுதாரர்கள்.

மேலே உள்ள இலக்கம் கொண்ட வழக்குமேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதன மில்லாத சொத்துக்களை நிருவ கிப்பதற்கு மேற்படி நீதிமன் றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்படடுள்ள தென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவ ரேனும் 1986ம் ஆண்டு யூலை மாதம் 9ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இம் மன் றில் தோன்றி அவ்வாறு பதி யப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலா காதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவை ப்படுத்தப்படுகின்றீர்.

1986 ஆம் ஆண்டு மேமாதம் 28ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி.

**ஆழ்வார் சிவபாதசுந்தரம்,**
பதிவாளர்.

மு. யோககுமார்,
மனுதாரின் சட்டத்தரணி. [C 3194)

### A/L 88

தூயபிரயோக
கணிதம்
ஆரம்பம்: யூலை 5
10 - 15: காவிகள்
11 - 45: திரிகோண
கணிதம்
ஆசிரியர்: ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
[வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்]
(யூலை 5க்கு பின்பு அனுமதி இல்லை)
(C 3216)

### 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராமலிங்கம் நாகமணி**

தோற்றம்: 06-12-1910
மறைவு: 13-07-1985

பெருந்தோட்டம் தன் னில் உயர் பதவி வகித்த உத்தமரே, உம்மை இழ ந்து ஓராண்டு ஆனாலும் எம்மைவிட்டு எந்நாளும் நீங்காது உம் நினைவு.

உம்பிரிவால் வாடும்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளை.

நாவலடி ஒழுங்கை
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.
C 3221

### 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்



அமரர்
K.S.
**தம்பிரத்தினம்**

தோற்றம்: 15-2-1924
மறைவு: 05-6-1986

மாறாத அன்போடும், மட்டற்ற மகிழ்வோ டும், சீரோடு சிறப் பெய்தி, பேரோடு புகழ் பெற்று, மற்றோர் மதிக்க பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மையும் வாழவைத்த அன்புத் தெய்வமே! எம் நெஞ் சில் நினைவுள்ள வரை தாங்கள் நிலைதிருப் பீர்கள். தங்கள் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக் கிறோம்.

அன்னாரின் அந்தி யேஷ்டிக் கிரியைகள் 5 - 7 - 86 சனிக்கிழமை திக்கத்தில் நடை பெறும். உற்றார், உற வினர், நண்பர்களை அன்புடன் அழைக் கிறோம்.

அல்வாய் மேற்கு
அல்வாய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகள்

(C 3222)

சுருட்டு தொழிலாளருக்கு
பிள்ளையார் இரும்புத் தொழிற்சாலை

எம்மிடம் சுருட்டு வெட்டும் கத்திரிக்கோல்
புதிதாக எடுக்கவும்
கத்திரிக்கோல் சாணைபிடித்துக்கொடுக்கவும்
நீங்கள் தவறாது நாடவேண்டிய இடம்

**பிள்ளையார்**
**இரும்புத் தொழிற்சாலை,**
(பாம் ஸ்கூல் அருகாமை)
பலாலி றேட், திருநெல்வேலி.
(C 3220)

**NAVASATHTHEI**
**Industries & Engineering Services**

Repaires of all Electro Mechanical Appaliances
Specialist in all types of Rewindings and
Water Pumps Repaires.

மேற்படி ஸ்தாபனத்திற்கு பயிலுனர்களும்
வேலையாட்களும் தேவை.

தொடர்பு:
துர்க்காபுரம்,
கே. கே. எஸ். றோட்,
தெல்லிப்பழை. [C3196]

### ராஜீவின் இன்னொரு சாதனை:

# மீசோராம் கிளர்ச்சியாளர்களுடன்

# இந்திய அரசு சமரச உடன்படிக்கை

## கிளர்ச்சித் தலைவர் முதலமைச்சர் ஆகும் வாய்ப்பு

**புதுடில்லி, ஜூலை 1**

**இந்தியாவின் வடகிழக்கு பிரதேசமான மிசோராமில் கடந்த 20 ஆண்டுகளாக நடைபெற்ற கிளர்ச்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஒப்பந்தமொன்றில் நேற்று முன்தினமிரவு புதுடில்லியில் இந்திய அரசு மிசோ கிளர்ச்சியாளர் தலைவர்களுடன் கைச்சாத்திட்டுள்ளது.**

இவ் உடன்படிக்கையில் மத்திய உள்துறை செயலர் திரு. ஆர். டி. பிரகான் மிசோ தேசிய முன்னணி தலைவர் திரு. லால் டெங்க்கா, மிசோராம் தலைமைச்செயலர் திரு. லால்கானு ஆகியோர் கையெழுத்திட்டனர். அப்பொழுது மிசோராம் முதலமைச்சர் திரு. லால்தனுகன்வாலாவும் உடனிருந்தார்,

கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தப்படி மிசோராம் பிரதேசத்திலுள்ள ஆளும் காங்கிரஸ் அரசாங்கம் விலகிக்

உலகச் செய்திகள்

கொண்டு மிசோ சேசிய முன்னணியையும் காங்கிரசையும் கொண்ட ஓர் கூட்டு அரசாங்கத்திற்கு வழிவகுக்கும். முன்னணியின் தலைவரான திரு. லால் டெங்கா இதற்கு தலைமை வகிப்பார்.

பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறும்வரை இந்த அரசாங்கம் பதவியிலிருக்கும் மேலும் முன்னணியைச் சேர்ந்த கிளர்ச்சியாளர்கள் தமது ஆயுதங்களை கைவிட்டு தொடர்ந்து ஓர் அரசியல் கட்சியாக செயல்படுவர். இதற்கு பதிலாக மிசாராம் பிரசேத்திற்கு கூடிய ஆட்சியுரிமையையும் மாநில அந்தஸ்தையும் வழங்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்கும்:

இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்ட வேறு நடவடிக்கைகளாக பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும்.

* தேசிய முன்னணியான எம். என். எப். கட்சி மிசோராமில் அமைதியையும் சகஜநிலையையும் மீண்டும் ஏற்படுத்தும் பொருட்டு தலைமறைவு நடவடிக்கை அனைத்தையும் நிறுத்தும்.

* எம். என். எப். கட்சி சட்டத்தின் சரத்துக்களுக்கு இசைய தன் ஷரத்துக்களை திருத்த உடன் நடவடிக்கை எடுக்கும்.

* மிசோ எம். என். எப். கட்சி மூலம் பயிற்சிபெற்ற பல குழுக்களுக்கும், ஆயதவிநியோகம் பாதுகாப்பு நடவடிக்கைகளை இனி வழங்குவதில்லையென எம். என். எப். கட்சி முடிவுசெய்துள்ளது.

* இதுவரை தலைமறைவாக இருந்தவர்களுக்கு மறுவாழ்வு வசதி அளிக்கப்படுமென மத்திய அரசு அவ்வுடன்படிக்கை பத்திரத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

* இவை தொடர்பாக மிசோராம் அரசால் கூறப்பட்டுள்ள திட்டங்களை பரிசிலனைசெய்த பின்னர் இவை நடைமுறைப்படுத்தப்படும்.

இவ்வுடன்படிக்கை தொடர்பாக மிசோ தேசியமுன்னணி தலைவர் திரு. லால் டெங்கா கருத்துதெரிவிக்கையில் இது மிசாராம் மக்களுக்கு புதிய சகாப்தம் ஒன்றின் உதயத்தை குறிக்கிறது என்று வர்ணித்தார்.

மிசோராம் முதலமைச்சர் திரு. லால் தனுகன் வாலா புதுடில்லியில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் மிசோராம் மக்களுக்கு இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சிறப்பான நிகழ்ச்சியென்று குறிப்பிட்டுள்ளார். பின் அவர் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியை சந்தித்து மிசோராம் பிரச்னைக்கு தீர்வுகாண்பதில் செய்துள்ள முயற்சிகளுக்காக அவரிடம் தனது நன்றியை தெரிவித்தார்.

மிசோ உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதை மிசோராமிலுள்ள அனைத்து மக்களும் வரவேற்றுள்ளனர். (சிவ)

## கூட்டு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

புதுடில்லி, ஜூலை 1

பஞ்சாப் மாநிலத்தில் பயங்கரவாத செயல்களால் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரை பாதுகாக்க கூட்டாக நடவடிக்கை எடுக்குமாறு அகில இந்திய விடுதலை வீரர்கள் ஸ்தபனம் மத்திய அரசையும், பஞ்சாப் மாநில அரசையும் வறபுறுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற ஸ்தாபன கூட்டமொன்றில் பயங்கரவாதம் மற்றும் தேசவிரோத செயல்களில் ஈடுபடுவோரை விரைவில் விசாரணைசெய்ய நடமாடும் நீதிமன்றங்களை அமைக்குமாறும் கேட்டுள்ளனர். (சிவ)

## பிரான்ஸ் 3-வது இடம்

மெச்ஸிக்கோ, ஜூன் 30

வெக்ஸிக்கோவில் நடைபெற்ற 'உலகக் கிண்ண' உதைபந்தாட்டப் போட்டியில் தற்போதைய ஐரோப்பிய சாம்பியனான பிரான்ஸ் 3-வது இடத்தைத் தட்டிக் கொண்டது.

பிரான்ஸ் கோஷ்டிக்கும் பெல்ஜியம் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற இப்போட்டியில் பிரான்ஸ் வெற்றி பெற்றது.

மேற்படி போட்டியில் இரு கோஷ்டிகளும் ஆட்டம் தொடங்கி முடிவடையும்வரை மிகவும் விறுவிறுப்பாகவே விளையாடியதால் ஆட்டம் முடிவடையும் போது இரு கோஷ்டிகளும் தலா இரு கோல்களைப் பெற்றிருந்தன.

இதன்பின் வழங்கப்பட்ட மேலதிக 30 நிமிடப் போட்டியில், பிரான்ஸ் மேலும் இரு கோல்களைப் போட்டு 4—2 கோல்களால் வெற்றி பெற்றது. (வி)

## பாடசாலை சனசமூகநிலையங்களை மக்கள் காக்கவேண்டும்

யாழ்ப்பாணம் செவ்வாய்

''பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் என்பன மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பனவாகும். இந் நிறுவனங்களைக் கட்டிக் காத்து வளர்த்துக் கொள்வதன் மூலமே மக்கள் தம் வாழ்க்கையில் நல்லமுறையில் முன்னேற முடியும்.''

இவ்வாறு அரியாலை மேற்கு ஸ்ரீகலைமகள் சனசமூக நிலையத்தின் 40 வது ஆண்டு நிறைவு விழாவிலும், விளையாட்டுப் போட்டியிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு மு. இராமலிங்கம் கூறினார்.

மேற்படி நிலையத் தலைவர் திரு,எஸ் சிவதாஸன் தலைமையில் நடைபெற்ற விழாவில் அதிபர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இக்கட்டானஇக்காலகட்டத்தில் விளையாட்டுக்களில் நாம் ஈடுபடுவது மிகவும் அவசியமாகும். ஓடவும்,பாயவும்,பயிற்சி பெற்றிருப்பது இன்று அவசியமாகிறது.

''துன்ப நிகழ்வுகள் பற்றியே சதா நினைத்துக் கொண்டிருக்கிற நம் மக்கள் விளையாட்டுப் போட்டிகளிலும், விழாக்களிலும் சிறிது நேரத்தைக் கழித்து இன்புறுவது மிகவும் நல்லதே.''

விளையாட்டு வீரர்களுக்கான வெற்றிக் கேடயங்களையும், வெற்றிக் கிண்ணங்களையும் திரு இராமலிங்கம் வழங்கினார். (ஐ)

## புற்று நோய் அறிவுப் போட்டி

உடுவில், செவ்வாய்

பாடசாலை மாணவர்களுக்கிடையே புற்று நோய் பற்றிய அறிவு வளர்ச்சியை ஊக்குவிக்கவும், அவர்கள் ஊடாக சமூகத்தில் புற்றுநோய் பற்றிய விழிப்பை ஏற்படுத்தவும், வடமாகாண புற்று நோய்ச்சங்கத்தினர் புற்று நோய் அறிவுப் போட்டியொன்றை நடாத்தவுள்ளனர்.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட உள்ள இவ்வறிவுப் போட்டியில் க. பொ. த. உயர்தர, சாதாரணதர மாணவர்கள் மட்டும் பங்கு பற்றலாம்.

இப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டும் முதல் மூன்று மாணவர்களுக்கும் முறையே 500 ரூபா, 250 ரூபா, 100 ரூபா ரொக்கமும், 25 ரூபா கொண்ட ஐந்து ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

## பற் சிகிச்சை நிலையம்

அராலி, செவ்வாய்

யாழ் அராலி சரஸ்வதி ம. வி. ல் கடந்த இரண்டு வாரம், பாடசாலை மாணவர்களுக்கான இலவச பற் சிகிச்சை நிலையம் நடைபெற்றது.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள பாடசாலை பற் சிகிச்சை நிலையத்தினரால் நடாத்தப்பட்ட இந் நிலையம் சரஸ்வதி ம. வி பாடசாலை மாணவர்களுக்கும் அராலிப்பகுதி ஏனைய பாடசாலை மாணவர்களுக்கும் சிறந்த சேவையாற்றியது.

இச் சிகிச்சையினை இலவசமாக மேற்கொண்ட நிலையத்தினருக்கு சரஸ்வதி ம. வி அதிபர் திரு மு. திருநீலகண்டசிவம் தமது பாராட்டுகளை தெரிவித்தார். [சிவ]


'யானை மார்க் குளிர்பானங்கள்'

விற்பனையாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும்

முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாணத்தில், விற்பனை செய்யப்படும் 'யானை மார்க்' சோடா வகைகள், 'யானை மார்க்' போத்தல்களில் அடைக்கப்பட்டு, போலி மூடிகள் போடப்பட்டு விற்பனையாகின்றன. இப்போத்தல்களில் அடைக்கப்படும் மென்பானங்கள் சுகாதாரத்துக்குக் கேடு விளைவிப்பன. எனவே, இப்பானங்கள் எம்மால் விநியோகிக்கப்படவில்லை. இப்பானங்களை வாங்குவதற்கோ, அல்லது விற்பனை செய்வதற்கோ நாம் பொறுப்பாளிகளல்ல. நமது மக்களின் நலன் கருதி இதனை அருந்த வேண்டாம் எனப் பொதுமக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்கின்றோம்.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,

31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(A 760)

### மணிவாக்கு

ஊருக்கு உழைத்திடல் யோகம் - நலம்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும்போது - உளம்
பொங்கல் இலாத அமைதி மெய்ஞானம்.

— பாரதியார்.

## நமதுநோக்கு

# மீசோ கிளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி?

'பஞ்சாப்' தனிநாடு கோரிக்கைக்கு முற்றுப்புள்ளிவைக்கும் நோக்கத்தில் சீக்கியத் தலைவர்களுடன் இந்திய பிரதம மந்திரி திரு ராஜீவ்காந்தி உடன்பாடுசெய்து அமைதி முயற்சிகளில் ஈடுபட்டபோதிலும் தீவிரவாதிகளின் கிளர்ச்சி ஓய்ந்தபாடில்லை. பத்திரிகைகளில் வெளிவரும் தகவல்களின்படி அங்குள்ள பெரும்பான்மை மக்கள் இந்திய அரசின் நன்முயற்சிகளுக்கு மதிப்பளித்து ஒருமைப்பாட்டுடனேயே வாழ விரும்புகிறார்கள். ஆனால் பெரும்பாலும் அப்பாவி மக்களும், அரசியல் பிரமுகர்களும் அன்றாடம் கொல்லப்பட்டுவருவதாகத் தகவல்கள்வருகின்றன.

பஞ்சாப் உடன்பாட்டின்படி சண்டிகார் நகர் கைமாறவிருப்பதன் காரணமாக எழுந்துள்ள பிரச்னைகளும் அங்கு அமைதியின்மையைத் தோற்றுவித்துள்ளன. சண்டிகார் நகருக்குப் பதிலாக ஹரியானாவுக்கு வழங்கப்படவிருக்கும் பகுதிகளில் இனக்குமுறல்கள் தோன்றியுள்ளன. சீக்கியர் வாழும் பகுதிகளிலிருந்து இந்துக்களும் இந்துக்கள் வாழும் பகுதிகளிலிருந்து சீக்கியரும் இடம்பெயர்ந்து செல்ல முற்படுவதனால் அகதிகள் பிரச்னையும் தோன்றியுள்ளது. இந்திய மத்திய அரசும் பஞ்சாப், ஹரியானா மாநில அரசுகளும் இந்த நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்திவருகின்றன. அப்பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் அங்கு அமைதியை மீண்டும் ஏற்படுத்துவதில் காலம் நீடித்த போதிலும் கஷ்டமிருக்காது என்றே கருத வேண்டும். ஏனெனில் இன, மொழி, மத அடிப்படையில் மாநில அரசுகளைப் பார்க்கும் மரபு மத்திய அரசுக்கு இல்லையென்பது ஒருபுறமிருக்க இந்திய அரசியல் அமைப்பே அவ்வாறான மரபுகளைத் தவிர்ப்பதற்கு வழிசமைத்திருப்பதையும் கவனிக்கலாம்.

தனிநாடு என்ற கோரிக்கை ஆயுதம் தரித்த ஒரு சிலரால் மட்டுமே முன்வைக்கப்பட்ட ஒன்று எனில், நிச்சயமாக மக்கள் ஆதரவு இல்லாத நிலையில் அது பிசுபிசுத்துப் போகும்.

பஞ்சாப் மாநிலம் பஞ்சாப் மக்களாலேயே ஆளப்படுகின்ற நிலையில் அவர்களின் பிரதான குறைபாடுகளை அனுதாபத்துடன் கேட்டறிந்து தீர்த்துவைக்கும் தாராள மனப்பான்மையை மத்திய நிர்வாகம் கொண்டிருக்கும் நிலையில் தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளையும் என்ற கவலை இருக்க முடியாது. என்றாலும் அவ்வாறான சிக்கல்களை ஏற்படுத்தி இந்திய அரசின் உறுதிப்பாட்டைக் குலைக்க சில வெளிசக்திகள் முயன்று வருவதாகக் கருதப்படுகின்றது.

எந்த வெளிச்சக்தியின் தந்திர முயற்சிகளும் விழிப்புள்ள மக்கள் சக்தியின் முன் எடுபடமாட்டாது என்பது வெளிப்படை.

பஞ்சாப்பில் அரசியல் சமூக நிலையை உருவாக்க தீவிரமாக ஈடுபட்டுவரும் அதேநேரத்தில் இந்திய பிரதமர் இன்னொரு தலைவலிக்கும் மருந்து கண்டுபிடித்துள்ளார். அது மீசோராம் கிளர்ச்சித் தலைவர்களுடன் செய்து கொண்டுள்ள புதிய உடன்பாடாகும்.

தலைமறைவு மீசோ இயக்கத்தலைவர் லால் டெங்காவுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள இந்த உடன்படிக்கையின்படி கிளர்ச்சியாளர்கள் உடனடியாகவே ஆயுதங்களைக் கீழே போடவும் தேசிய வாழ்வில் இணைந்துகொள்ளவும் முன்வந்திருக்கிறார்கள். மேலும் மீசோராமில் பதவியிலுள்ள காங்கிரஸ் அரசு பதவியிலிருந்து விலகிக்கொண்டு திரு லால் டெங்காவைத் தலைவராகக் கொண்ட புதிய அரசில் சேர்ந்து கொள்ளவும் இணங்கியுள்ளது.

தனிநாடு கோரி 20 ஆண்டு காலம் ஆயுதப் போராட்டம் நடத்தி வந்துள்ள மீசோ கிளர்ச்சியாளர்களை நேரடியாகச் சந்தித்துப்பேசி உடன்பாடு ஒன்று செய்துகொண்டுள்ள இந்தியத்தலைவர்களின் முன்மாதிரி பாராட்டுக்குரியது.

ஆயுதம் ஏந்த நேர்ந்த காரணங்களை அவர்கள் மூலமே கண்டறிந்து அதற்குத் தீர்வு காண்பதென்பது சுலபமானதல்ல அதனை திரு. ராஜீவ் காந்தி சாதித்துள்ளார்.

பிரச்னைகளை சிக்கலாக்கி சொந்த லாபம் தேடுவதே இன்றைய உலக அரசியலாக இருக்கும்போது சிக்கல்களை நாசூக்காக அவிழ்த்து சோர்வுற்றுள்ள மக்களுக்கு தெம்பும் நம்பிக்கையும் அளிப்பது பெருங்காரியம்.

மீசோ பிரச்னைக்கு திரு. ராஜீவ்காந்தி ஏற்படுத்தியுள்ள தீர்வு இது போன்ற பிரச்னைகளை எதிர்நோக்கும் ஆசியாவின் ஏனைய நாடுகளுக்கு ஒரு படிப்பினை.

## இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், செவ்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய இலட்சார்ச்சனை எதிர்வரும் 5ம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 9ம் திகதி புதன்கிழமை வரை நிகழவுள்ளது.

இலட்சார்ச்சனையைத் தொடர்ந்து 10ம் திகதிகணபதி ஹோமமும் 11ம் திகதி வெள்ளிக்கிழமை பகல்சங்காபிஷேகமும் மாலை சதுர்த்தி விழாவும் நிகழும். வெள்ளிக்கிழமை மாலை கணபதி வழிபாடும் தீப (லக்ஷ்மி) பூஜை என்பனவும் விசேஷமாக இடம்பெறவுள்ளன. (ப)

● சென்னையில் 'GUYS' நடாத்தும்

# ஈழத் தமிழருடனான ஆசிய மாணவரின் ஒருமைப்பாட்டு மாநாடு

ஈழ மாணவர் இளைஞர் பொதுமன்றம் (GUYS)

ஒழுங்கு செய்துள்ள ஈழவிடுதலைக்கான ஆதரவு வாரத்தை முன்னிட்டு தற்சமயம் சென்னையில் நடைபெறும் மாநாட்டையொட்டி ஈ. மா. இ. பொதுமன்றம் வெளியிடும் கட்டுரை இது.

"இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தை அங்கீகரித்து ஏற்றுக் கொள்வதோடு மனித உரிமைகளை மதிக்கக்கூடிய சுதந்திரமான, நாட்டு வளங்களின் பயன்களை மக்கள் அனுபவிக்கக்கூடியதாக ஓர் அரசை நிறுவுவதனை ஆமோதிக்கின்றோம். சுயநிர்ணய உரிமைக்கான அவர்களின் போராட்டத்தினை வாழத்துகின்றோம்" இவ்வாறு பல தடவைகளில் தமிழ் பேசும் மக்களுக்காக குரல் கொடுத்து தமது எதிர்ப்பினை ஜெயவர்த்தன அரசிற்குத் தெரிவித்து வந்த ஆசிய மாணவர் ஒன்றியம் (Asian Students Association- ASA) ஜூன் மாதம் 28ம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 4ம் திகதிவரையிலான காலத்தினை ஈழ விடுதலைக்கான ஆதரவு வாரமாகப் பிரகடனப் படுத்தியுள்ளது இவ்வாரத்தையொட்டிச் சென்னையில் மகாநாடொன்றும் சந்திப்புகளும் ஊர்வலமும் கலாச்சார நிகழ்ச்சிகளும் நடாத்தப்படுகின்றன.

### அமைப்பும் இலக்கும்

ஹொங்கொங்கில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் ஆசியமாணவர்ஒன்றியம்[ASA] 1969 ஏப்ரல் மாதம் ஸ்தாபிக்கப்பட்டது. ஏறக்குறைய 17 நாடுகளிலுள்ள 21 மாணவர் அமைப்புக்களை உள்ளடக்கிச் சிறப்பாக இயங்கிவருகின்றது. இதன் பிரதான நோக்கங்கள்:

★ பிராந்திய ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதுடன் சுயநிர்ணய உரிமைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடும் மக்களுக்கு ஆதரவழிப்பதோடு, ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை வளர்ப்பதும் வளப்படுத்துவதுமாகும்

★ இராணுவ அடக்குமுறைகளை எதிர்ப்பதும், மனித உரிமை மீறல்களைத் தடுப்பதுமாகும்.

★ 3ம் உலகநாடுகளில் ஏகாதிபத்திய சுரண்டலை முடிவிற்குக் கொண்டு வருதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இதிலுள்ள 21 அங்கத்துவ அமைப்புகளில் பிலிப்பைன்ஸ், அவுஸ்திரேலியா, தாய்லாந்து, ஹொங்ஹொங் நியூசிலாந்து, நேபாளம் ஆகியவற்றின் மாணவர் அணிகளை முக்கிய மானவையாகக் குறிப்பிடலாம்.

ஆசியாவின் பலநாடுகளிலும் அந்நாடுகளில் நடைபெறும் ஒடுக்குமுறைகளுக்கெதிராக ASA யினால் எதிர்ப்பு ஊர்வலங்கள், பிரசாரங்கள், மாநாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இவற்றினைவிட தொடர்ச்சியாக [Asian Students News] ஆசிய மாணவர் செய்திகள் என்ற காலாண்டு சஞ்சிகையையும் கல்வி, சமூகம் சம்பந்தமான வெளியீடுகளையும் ASA வில் நடாத்தப்படும் மகாநாடுகள் சம்பந்தமான அறிக்கைகளைப் புத்தகங்களாயும் வெளியிட்டுவருகின்றது இவற்றின் தொடர்ச்சியாக பல தடவைகளில் ஈழவர் மீதான அடக்குமுறைக்கெதிராக சிறிலங்கா அரசிற்கு தனது எதிர்ப்புக்களை அறிவித்துள்ளது. இவ்வெதிர்ப்புகள் யாழ் பல்கலைக் கழகத்தினதும், ஈழத்தின் மாணவ இளைஞர் பொது மன்றம் (GUYS) ஆகியவற்றின் முயற்சியினால் மேற்கொள்ளப் பட்டவையாகும். தற்போது ஜூன் 28ம் திகதி தொடக்கம ஜூலை 4ம் திகதி வரையான காலத்தை ASA, GUYS இணைந்து ஈழவிடுதலைக்கான ஆதரவு வாரமாகப்பிரகடனப் படுத்தியுள்ளனர். அதனை யொட்டிமாகநாடுகருத்தரங்குகள், ஊர்வலம், சந்திப்புகள் என்பவற்றை சென்னையில் ஒழுங்கு செய்துள்ளனர்.

### கடந்தகாலப் பணிகள்

இம் மாநாட்டை ஒழுங்கு செய்த மாணவ இளைஞர் பொதுமன்றம் [GUYS,] மட்டுமே ASA ல் அங்கம் வகிக்கும் ஈ விடுதலை மாணவ அமைப்பாகும். இது ஈழப்புரட்சி அமைப்பு (EROS ன் கருத்துகளால் பற்றிக்கொள்ளப்பட்டு அதன் மாணவ அமைப்பாக செயற்பட்டுவருகிறது இது 1980 ல் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் EROS ன் வெளியீடான 'தர்க்கீகம்' பத்திரிகைகளுடன் கிராமங்கள் தோறும் சென்று மக்களை அரசியல் மயப்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டுவந்தது. யாழ் பல்கலைக்கழகத்தில் ''ஈழப்பிரச்னையில் ஈழத்து எழுத்தாளரின் பங்கு'' ''தமிழ் மாணவரின் கல்வி நிலை'' ஆகிய கருத்தரங்குகளை 1981லும் 1982 லும் அது நடாத்தியது. 1983 தமிழ் மக்களின் வாழ்க்கைத்தரம் பற்றிய ஆய்வொன்றினை GUYS மேற்கொண்டது. இதே ஆண்டில் மாணவர்களுக்கான தமிழ் சஞ்சிகையாக 'நாங்கள்' வெளியீடு ஆரம்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுக்கொண்டு வருகிறது. இதனைவிட சர்வதேச ரீதியில் பிரச்சார நோக்கத்திற்காக GUYS எனும் ஆங்கில சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றது ஈழத்தின் எல்லாப்பகுதிகளிலும் மாணவ இளைஞர் பொது மன்றம் தனது செயற்பாடுகளை செய்து வருகிறது.

### சர்வதேச தொடர்புகள்

சர்வதேசரீதியில் இந்தியா இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, பேர்லின் சுவிஸ்லாந்து, பிரான்ஸ், நோர்வே, டென்மார்க் போன்ற நாடுகளில் GUYS செயற்பட்டு வருகிறது. அத்துடன் ஏனைய பல வெளிநாட்டு மாணவ அமைப்புக்களுடன் தொடர்புகளைக்கொண்டதும் ASA ல்அங்கத்துவம் பெற்றதுமான ஒரே ஒரு ஈழவிடுதலை மாணவ அமைப்பாக விளங்குகின்றது. தொடர்ந்தும் சர்வதேச அரங்கில் பிரசாரங்களை மேற்கொள்வதும் ஈழத்திற்கு வெளியேயுள்ள ஈழ மாணவர்களை அணிதிரட்டுவதிலும் ஈடுபட்டு வருகின்றது.

ஈழத்தினுள்ளே மாணவர்களை புரட்சிக்கான போராளிகளாக வளர்த்தெடுக்கும்பணியில் ஈடுபட்டுள்ளது. இதற்கெனமாணவர் மத்தியில் வெளியீடுகளை விநியோகித்தல், அரசியல் வகுப்புகள், கலந்துரையாடல்களை நடத்துதல் போன்றவையும் பொருளாதாரத் துறையில தகுநல் தொழில்நுட்பம் [Appropriate Technology] பற்றி அறிவையூட்டுதல், கண்காட்சிகள் நடத்துதல், விவசாயப் பண்ணைகள் நடத்துதல், வறிய மாணவர்களுக்கு இலவச வகுப்புக்களை நடத்துதல், பின்தங்கிய கல்வி மாவட்டங்களுக்கு தபால்மூலம் கல்விச் சேவை நடத்துவல், ஏனைய ஆவணங்களைக் காத்தல், புள்ளி விபரங்கள், தகவல்கள் சேகரித்தல் போன்ற வேலைகளில் GUYS ஈடுபட்டு வருகின்றது.

GUYS-ASAவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இம்மாநாட்டின் நோக்கம். அடக்கப்படும் தமிழ் மக்களின் தாகமான சுதந்திர ஈழத்திற்காக சர்வதேச ரீதியில் ஒழுங்கு திரட்டிய புரிந்துணர்வையும், ஆழ்ந்த ஈடுபாட்டினையும் ஏற்படுத்தலாகும்.

மாநாட்டின் முக்கிய நிகழ்ச்சிகளாக ஈழப்போராட்டத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றிய ஆய்வு, ஈழத்தின் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் பற்றிய ஆய்வு சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறல்கள் சம்பந்தமான ஆவணங்கள், ஆதாரங்களை ஆராய்தல். தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளின் குடும்பங்களுடன் தங்கியிருந்து அவர்கள் பிரச்சனைகளை ஆராய்தல். எல்லாத் தமிழ்த் தலைவர்களையும் குறிப்பாக விடுதலை இயக்கத் தலைவர்களைச் சந்தித்தல் ஈழப் பிரச்னை சம்பந்தமான கலாச்சார நிகழ்ச்சிகள் எதிர்காலத்தில் செய்யவேண்டிய வேலைத் திட்டங்களைத் திட்டமிடல், பத்திரிகையாளர் மகாநாடு ஆகியன அமையும்.

இறுதி நாளில் தமிழக மாணவர்களும் மகாநாட்டு பிரதிநிதிகளும் மாபெரும் ஊர்வலம் நடாத்துவர்.

எமது போராட்டத்தினைப் பற்றி சர்வதேச ரீதியில் தெளிவாக பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிக மிக அவசியமாகும். சிறிலங்கா அரசும் எமது போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் சர்வதேச பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளது. இவற்றினை முறியடிப்பதோடு எமது போராட்டத்தின் தார்ப்பரியங்களை சர்வதேச ரீதியில் வெளிக்கொணர வேண்டியது சகல விடுதலை ஸ்தாபனங்களினதும், விடுதலை விரும்பிகளினதும் தலையாய கடமையாகும். இம் மகாநாடு அப்பணியினை ஆற்றுவதில் ஓர் மைல் கல்லாக விளங்குமென்பதில் சந்தேகமேயில்லை.

# கிளிநொச்சி பாடசாலைகள் மூடப்பட்டநிலையிலுள்ளன

யாழ்ப்பாணம் புதன், கிளிநொச்சியிலுள்ள சென் திரேசா மகளிர் பாடசாலை, இந்து மகாவித்தியாலயம், கனிஷ்ட மகாவித்தியாலயம், மகாவித்தியாலயம், கனகபுரம் அ. த. க. பாடசாலை, கனகாம்பிகைக்குளம் கனிஷ்ட மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் சென்ற மாதம் 4ந் திகதிமுதல் மூடப்பட்டுள்ளன. சுமுகசூழ்நிலை நிலவினால் இப்பாடசாலைகள் இம் மாதம் 10ந் திகதிக்குப் பின் திறக்கப்படலாம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இத்துடன் கிளிநொச்சியில் உள்ள அரசாங்க காரியாலயங்களில்கடமைபுரியச்சென்ற ஊழியர்கள் போக்குவரத்து இன்மையால் திரும்பிவந்தனர் ன்றும் தெரிவிக்கப்படுகிறது

பரந்தன் சந்தியிலிருந்துகிளிநொச்சி வரை கால் நடையாகவே செல்லவேண்டிய நிலை இங்கு நிலவுவதாகத் தெரியவருகிறது [ஐ]

## இன்று பரிசளிப்பு விழா

[யாழ்ப்பாணம், புதன்]

பன்னாலை சேர். கனகசபை அ. த. க. பாடசாலை பரிசளிப்பு விழாவும் கல்வி அபிவிருத்திக்கண்காட்சியும் புதிய அலுவலகத்திறப்பு விழாவும் இன்று காலை பாடசாலை அதிபர் திரு வை. பொன்னையா தலைமையில் நடைபெறவுள்ளன.

முதன்மை விருந்தினராக யாழ் கல்வித்திணைக்கள கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரம் கலந்து கொள்வார்.

திருமதி தேவகன்யா குலசேகரம் பரிசில்களை வழங்குவார். [வா]

## இன்று

யாழ்ப்பாணம், புதன்

திருநெல்வேலி ஸ்ரீ பத்தரகாளி அம்மன் தேவஸ்தான இலட்சார்ச்சனை வைபவம் இன்று நடைபெறும் இதனையொட்டி விசேட பூசைகளும் இடம்பெறவுள்ளன.

## ஸ்ரீ. ல. சு. க திருத்தம் கொண்டுவரும்

(லண்டன் சவெ்)

மீண்டும்மாதம் ஜூலை15ம்திகதி நடைபெறவுள்ள அரசியற் கட்சிகளின் மாநாட்டில் இலங்கை சுதந்திரக்கட்சியும் கலந்துகொண்டு அரசியல் ஆலோசனைகளில் பல முக்கிய திருத்தங்களைக் கொண்டு வரவுள்ளதாக பி. பி ஸி செய்தி தெரிவித்துள்ளது. (செ)

## டொலர்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

''முல்லைத்தீவு மாவட்டத்தில் டொலர் பாம் ராணுவ முகாமில் இருந்து காலை 9-30 மணியளவில் கென்பாம் முகாமிற்கு 100க்கும் மேற்பட்ட ராணுவத்தினர் நடைபவனியாக சென்றபோது சிலோன் தியேட்டர் முன்பாக எமது வீரர்கள் நேரடி மோதல் தொடுத்ததில் முன்னுல் வந்த பல ராணுவத்தினர் ஸ்தலத்திலேயே மாண்டனர். பலர் படுகாயமுற்றனர். மீதி ராணுவத்தினர் முகாம் திரும்பினர் எமது தரப்பில் எதுவித இழப்புகளும் இல்லை'' [மா]

## குண்டுமிரட்டல்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கள் இப்பாதை வழியே பயணம் செய்யவில்லை. இதனுல் பிரயாணிகள் பலத்த சிரமத்துக்குள்ளானுர்கள்

குண்டு வைக்கப்பட்டுள்ளது எனக் கிடைத்த தகவலையடுத்து இவ்வீதியால் ரோந்து வந்த பொலிசார் வட்டகொட ரயில் நிலையத்தருகேயுள்ள மதகொன்றில் பார்சல் ஒன்று கிடக்கக் கண்டனர், ஆயினும் அப்பாசலில் வெறும் கற்களே காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. [ய-செ]

## வழிப்பறி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றி, பயங்கரசோதனைகளையும், வேதனைகளையும் கடந்து கொண்டுவந்து, மகாமுப்பிலிருந்து லொறிமூலம் அனுப்பி வைத்த தனிமனித உடமைகளும், தமிழ் மண்ணிலே வைத்துச் சூறையாடப்பட்டுள்ளன

இத்தகைய சம்பவங்களால் இம்மண்ணின்வர்த்தகத்துறை பாதிப்படைவதுஒருபுறமிருக்க ஏற்கனவே பல்வேறு வகையிலும் பாதிப்புக்குள்ளாகி பரிதவித்துக் கொண்டிருக்கும் எம் மக்கள், மேலும் பற்ருக்குறையாலும் பட்டினியாலும்அவதியுறவேண்டிய ஓர் துர்பாக்கிய சூழ்நிலை உருவாகின்றது.

ஆகவே மீண்டும் இவ்வாறுன சம்பவங்கள் நடைபெருதிருக்வும்நடைபெற்ற சம்பவங்களுக்கு நிவாரணம் காணவும் வர்த்தகத்துறையிலுள்ள அனைவரும் ஒன்று திரண்டு வலுவான எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டியது அவசியமாகிறது என்று அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (வா)

## வகுப்பு தொழிலாளர் வேண்டுகோள்

[யாழப்பாணம் புதன்]

விஸ்வமடு றெட்பானுவுக்கு அருகாமையில் வைத்து இம் மாதம் 14ம் திகதி கடத்தப்பட்ட எஸ். வி எம். ஸ்தாபனத்துக்குச் சொந்தமான பொருட்களை மீட்டுத்தரும்படி மேற்படி ஸ்தாபனத்தைச் சேர்ந்த வகுப்புத்தொழிலாளர்கள் பிரசுரமொன்று மூலம் இயக்கங்களுக்கு பணிவான வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### இராமநாதன் மண்டபத் திருத்த வேலைகள்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மேற்குறிப்பிட்ட வேலையை மேற்கொள்வதற்காக தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. ஒப்பந்தகாரரர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அல்லது கட்டடத் திணைக்களத்தில் ரூபா 4 லட்சத்திற்குப் பதிவு சய்யப்பட்டிருத்தல் வேண்டும். இதற்கான கேள்விப்பத்திரங்களையும் படவரைபுகளையும் ரூபா 200/- கட்டணமாசச் செலுத்தி யூலைமாதம் 10-ந் திகதிவரை வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 15-07-86 முற்பகல் 10 மணி ஆகும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

[A-896]



உஷா மினி
10-30 2-30 4 15 7-00
WAR BUS
நவீன ஆயுதங்களுடன் 3 கெரில்லாக்கள் இராணுவ முகாம்கள் மீது தாக்கும் சிறந்த படம். இன்றைய இளைஞர்கள் கண்டிப்பாக பார்க்கவேண்டிய படம்.



லிடோ
காலை 10-30, 2-30, 6-30
M.G R -லதா நம்பியார்-தேங்காய் நடித்த
நீதிக்குத் தலை வணங்கு
(புத்தம் புதிய பிரதி)



வெலிங்டன்
10-30, 2-30, 6-30
சிவாஜி-உஷாநந்தினி சாரதா-மனேகர் நடித்த
என்னைப் போல் ஒருவன்
[கலர்]



### முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்டத்திலுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் விற்பனை முகவர்கள் அனைவரையும் இன்று (02-07-1986) பிற்பகல் 1-30 மணியளவில் Y. M. C. A. கட்டிட முன்றலில் கூடுமாறு வேண்டுகின்றோம்.

நிர்வாக இணைச்செயலாளர்கள்,
யாழ். மாவட்ட எரிபொருள் விற்பனையாளர் சங்கம்.

[C-3228]



### VACANCIES

Applications are invited for the following posts.

1. HEALTH EDUCATOR - Female.
Dynamic, self motivated female with 10 years experience in Public Health education.
2. MULTI - DUTY CLERK - Female.
3 years experience in clerical work, fluency in English and ability to type.

Note:
Office in Jaffna town and field work in the entire peninsula. Salary negotiable. Employment on short term basis

Apply with Bio - data:
Closing date: 10th July 1986.
C/o Advertiser, C 3225 Eelanadu Jaffna.

C 3225


# இலங்கையின புதிய யோசனைகள்: அமெரிக்க தூதுவர் ஸ்பெயின் வரவேற்பு

கொழும்பு செவ்

இலங்கை அரசினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆலோசனைகளை இலங்கைக்கான அமெரிக்கத்தூதர் திரு ஜேம்ஸ் வை ஸ்பெயின் வரவேற்றுள்ளார்

இவ்வாலோசனைகள் பற்றிய முதலாவது வெளிநாட்டு விமர்சனம் இதுவாகும். இந்தியாவும் இவ்வாலோசனைகள் நுணுக்குமான ஆராய்வுக்குட்படத்தகுந்தவை எனக் கூறியிருந்தாலும் இலங்கை இனப்பிரச்னைத் தீர்வுக்கான சமரச முயற்சிகளில இந்தியா மத்தியஸ்தராகவே இருந்து வருவதனுல் இந்தியாவின் இக்கருத்தை மூனரும் நபரின் கருத்தைப் போல் கொள்ள முடியாது என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆலோசனைகள் சமரச பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான அடிப்படைத்திட்டமாக அமையலாம் என்று தெரிவித்துள்ள திரு ஸ்பெயின், சமரசமுயற்சிகளில் ஈடுபட்டுள்ள அனைவரும், இம்முயற்சிகள் நல்ல முறையில் அமையவேண்டும் என பாடுபட்டுவருவதாகக் கூறினர்

இதேவேளை கடந்தவாரம் இலங்கைக்கு வந்திருந்த இரு அமெரிக்க யுத்தக் கப்பல்களில் இலங்கை அரசுக்கு ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டன என்று சென்னையில் ஈ. பி ஆர். எல். எவ். கூறியிருப்பதைத் திரு. ஸ்பெயின் மறுத்தார். [ய-செ

## வாகரை---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிடைத்த தகவலின் பேரில் 3 ட்ரக்குகளில் இராணுவத்தினர் சென்றபொழுதே கண்ணிவெடியில் சிக்கியதாகவும், பின்னர் ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் பலியானதாகவும் கூறப்படுகிறது.

கண்ணிவெடிச் சம்பவத்தில் படுகாயமடைந்த 3 இராணுவத்தினர் ஹெலிகொப்டர் மூலம் அனுராதபுரம் ஆஸ்பத்தரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர், [மா]

## பேச்சுக்கள்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுமே த. வி. கூட்டணி மேற்கொள்ளும்.

இதைவிடுத்து சர்வகட்சி மகாநாடுகள் மூலமாகவோ, வேறு கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தோ இந்த யோசனைகள் குறித்து த. வி கூ. அரசுடனே அல்லது ஜனதிபதியுடனே பேச்சு நடத்தாது'' என்ருர். [செ]

## ...னையிறவு --

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சல்ல வேண்டுமென யாழ் பர்வட்ட இணைபதிகாரி தெரிவித்திருந்தது தெரிந்ததே.

பலாலி இராணுவ முகாமுக்கு டயண அனுமதிச்சீட்டுப் பெறுவதற்கு எப்படிச் செல்வதென்று தெரியாமல் வாகனச் சொந்தக்காரர்கள் நேற்றுக் குழம்பியிருந்தனர்.

யாழ் நகரிலுள்ள பிரபல முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் கொழும்பக்கு பொருள்கள் ஏற்றிவரச்செல்வதற்காக அனுமதிப்பதிதிரம் பெற நேற்று பலாலி இராணுவ முகாமுககுச்சென்றபொழுது பலவித கஷ்டங்களுக்குள்ளாகவேண்டியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

லொறியில் ஏற்றிச் செல்லும் பொருள்கள் விபரம், அவற்றின் உரிமையாளர் அத்தாட்சிப்பத்திரம், லொறி சம்பந்தப்பட்ட அத்தாட்சிப்பத்திரங்கள் போக்குவரத்துச் செய்யும் பாதை விபரங்கள், வாகனத்தில் செல்வோர் பற்றிய விபரங்கள், கொழும்பிலிருந்து ஏற்றிவரும் பொருள்கள் பற்றி விபரங்கள் ஆகியன குறித்து அதிகளவில் விஞவப்பட்டதாம்.

இதனைத்தொடர்து அவ் வர்த்தகர் தமது இருப்பிடம் நோக்கித்திரும்பிவிட்டாராம். பலாலி இராணுவமுகாமில் மேற்படி அத்தாட்சிப்பத்திரங்களை மர்பித்தபோதிலும், அங்கிருந்து பெற்றுக்கொண்ட அனுமதிப் பத்திரத்துடன், வநது யாழ்.கேட்டை முகாமிலேயே உரிய அனுமதிப்பத்திரம் பெறவேண்டுமென்றுபிந்தி வந்ததகவல் தெரிவிக்கிறது. (மா)

## வடக்கு, கிழக்கு முதலிடம்

கொழும்பு, செவ்வாய்

கடந்த ஆண்டில் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட சின்ன செங்காயத்தில் 75% வடக்கு, கிழக்குப் பகுதிகளிலேயே உற்பத்தி செய்யப்பட்டதாகஅறிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி மகோற்சவாரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தின் கொடியேற்றத் திருவிழா எதிர்வரும் 4ந் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

பத்து நாட்கள் மகோற்சவம் தொடர்ந்து நடைபெற்று எதிர்வரும் 12ந் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் 3ந் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஷ)

## பேச்சுப்போட்டியில் முதலிடம்

யாழ்ப்பாணம், புதன்

யூனிசெப் ஸ்தாபனம் யாழ் மாநகர சபையுடன் இணைந்து நல்லூர் யமுனரிப் பகுதிப் பாடசாலைகளின் மத்தியில் சுகாதாரம் சம்பந்தமாக நடத்திய பேச்சுப்போட்டியில் நல்லூர் சாதன பாடசாலை மூன்று பிரிவுகளிலும் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது

நல்லூர் சாதன பாடசாலை மாணவிகளான செல்வி த. ஞானபூரணி கீழ்ப்பிரிவில் முதலாம் இடத்தையும், செல்வி த. தமயந்தி மத்தியபிரிவில் முதலாமிடத்தையும் செல்வி ப. சாந்தினி மேற்பிரிவில் முதலாம் இடத்தையும் பெற்றனர்.

## தீயிடப்பட்டன--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தைக் கொட்டில்கள்யாவும் நேற்று இரவுதீயிட்டு கொளுத்தப்பட்டன.

இத்தீவைப்புச்சம்பவத்தினுல் இக்கொட்டில் கடைகளை அண்டிய குடியிருப்புபகுதியில் பதற்றம் நிலவியது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தைத்தொடர்ந்து நேற்று நண்பகலுக்குப் பின் நகரில் சனநடமாட்டம் குறைந்து காணப்பட்டது.

இக்குண்டு வைப்பின்போது பலியானேரின் சடலங்கள் வவனியா ஆஸ்பத்திரி சவச்சாலையில்வைக்கப்பட்டுள்ளன. இது தொடாபான மரண விசாரணை இன்று நடைபெறும். [வா]

# இந்திய-இலங்கை நல்லுறவுச் சங்கம் உதயம்!

சென்னை

இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள மக்கள் பாவினர் மத்தியில் பரஸ்பர நல்விளப்பத்தையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்துவதற்கென இலங்கை இந்திய நல்லுறவுச் சங்கமொன்று உதயமாகியுள்ளது.

சமூக சமய உறவுகளுக்கான நிலையத்தலைவர் பிதா. திஸ்ஸ பாலசூரியாவும் வேறு சில பிரமுகர்களும் தமிழ நாட்டினைச் சார்நத பிரமுகர்களும் இணைந்து மேற்படி சங்கத்தை உருவாக்கியுள்ளனர்.

இலங்கையின் இன்றைய இனப்பிரச்சினைக்கு நீதியானதும் கௌரவமானதுமான ஒரு தீர்வைக் காணுவதில் முடிந்த உதவியைச் செய்வதையே முக்கிய இலக்குகளாகக் கொண்ட இச்சங்கத்தின் ஏற்பாட்டுக் குழுவில் இந்திய தரப்பில் ஆயர் சுந்தர் கிளார்க் திருவாளர்கள் கே. ஸ்ரீநிவாச ஐயங்கர், ரி. கே. ஊமன் கரகசந்தா, கலாநிதி ஏ கே. தம்பி ஆகியோரும் இலங்கைதரப்பில் சங். உடலமட குணரத்னதேரோதிருவாளர்கள் டொட்ஃபிலே குணதிலக, அண்டலூட் மணிவாசகன் மஹ ஹிம்பூகைதீன், ஆயர் டொன் சில்வெஸடர், கலாநிதி ஜே.ஸ்ரததிலகம், கலாநிதி பிராஸ் ஜயசிங்ஹ சங்ரத்தினபுர சவிராச நாரத தேரோ ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்

இச்சங்கம் தனதுமுதல் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானங்களில் ஒன்று தனது நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுவதில் இலங்கை இந்தியாவின் நல்லெண்ணத்தையும் செல்வாக்கையும் காத்திரமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென வலியுறுத்துகின்றது. (ஷ)

## பரீட்சை ஆகஸ்ட் முதலாந் திகதி

கொழும்பு செவ்வாய்

86ம் ஆண்டுக்கான க பொ த. [உ த.] பரீட்சைகள் ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி ஆரம்பமாகி ஆகஸ்ட் 25ம் திகதி வரை நடைபெறவுள்ளதாக கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது

பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆரம்பமாவதற்கு 2 கிழமைகளுக்கு முன் சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளது. [சிவ]

# 'உயிர் இழப்புக்களை முதலுதவி தவிர்க்கும்'

பண்டத்தரிப்பு, செவ்வாய்

''இன்றைய காலகட்டத்தில் முதலுதவிச் சிகிச்சையின் அத்தியாவசியம் சகலராலும் உணரப்பட்டு வருகின்றது. குறிப்பாக இத்துறையில் யுவதிகள் பெறும் பயிற்சியும் தேர்ச்சியும் விபத்துகளும் அகால மரணங்களும் அதிகரித்து வரும் இக்காலகட்டத்தில் அநாவசிய உயிர் இழப்புக்களைத் தவிர்க்கக் கூடியதாக இருக்கும் என்பது எமது நம்பிக்கையாகும்.''

இவ்வாறு அளவெட்டி கண்ணகி மாதர் கிராம முன்னேற்றச்சங்கத்தின் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் தாதிகள் பிரிவின் அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் வடபிரதேச ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி குறிப்பிட்டார்.

அளவெட்டி அருணசலம் வித்தியாலயத்தில் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு ஓய்வு பெற்ற உதவி அரசாங்கஅதிபரும். அளவெட்டி மக்கள் சுகாதாரக்குழுத் தலைவருமான திரு சோ அருணசலம் தலைமை வகித்தார்.

டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: இச் சங்கத்தினர் தமது உறுப்பினர்களுக்கு முதலுதவிப் பயிற்சியை வழங்கி சென். ஜோன்ஸ் அம்புலஸ் படைப் பிரிவைஅமைத்து இப்பகுதி மக்களுக்குசேவையாற்ற முன் வந்தமை பாராட்டுதற்குரியதாகும்.''

காங்கேசன்துறைத் தொகுதி பகுதி அத்தியட்சகர் திரு க அருந்தவராசா, பிரதேச அத்தியட்சகர் நா. போஜன் உட்பட பலர் உரையாற்றினர்கள்

இறுதியில்முதலுதவிப் பயிற்சி பெற்ற உறுபபினர்களுக்கு சான்றிதழ்களையும், நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்களையும் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி வழங்கினர்.

## யாழ் வந்த 3 வாகனம் புதைந்தன!

யாழ்ப்பாணம், புதன்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்தஒருதனியார்பஸ்ஸும் 2 லொறிகளும் முல்லைத்தீவுக்கும் பரநதனுக்குமிடையில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட மதகடியில் புதைந்து கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குண்டுவைத்துத் தகர்க்கப்பட்ட மதகை விட்டு விலகி வரும்பொழுதே இந்தவாகனங்கள் புதைந்தனவயாம். (மா)

## வட்டு இந்துவெற்றி

யாழ்ப்பாணம், புதன்

வட்டு. இந்துக்கல்லூரி ஆசிரியர்களுக்கும், சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி ஆசிரியர்களுக்குமிடையிலான மென் பந்துத் துடுப்பெடுத்தாட்டப் போட்டி கடந்த வாரம் நடைபெற்றது.

விக்ரோரியாக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் வட்டு இந்துக் கல்லூரி ஆசிரியர்கள் அணி வெற்றி பெற்றது. வட்டு இந்து அணிக்கு ஆசிரியர் வ. யோகானந்தசிவமும், சுழிபுரம் விக்ரோரியா அணிக்கு வீ. எம். சர்மாவும் தலைமை தாங்கினர். (ரா)

## கோப்பாய் வீரபத்திரர் மஹோற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

கோப்பாய் தெற்கு பழைய வீதி வீரபத்திர சுவாமி ஆலய மஹோற்சவம் இம் மாதம் 4ந் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

ஒன்பதாந்திகதி புதன்கிழமை பகல்சங்காபிஷேகமும் இரவு பஞ்ச முகார்ச்சனையும் இடம்பெறும். 12ந் திகதி சனிக்கிழமை தேர் உற்சவமும் மறுநாள் ஞாயிறு தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. (ஐ)


**பிரயாண ஒழுங்குகள்**

கனடா ஜேர்மனி
பிரான்ஸ் டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொன்ட் (BOND),
விஸா, ரிக்கற் ஆகியனவும்
செய்துகொடுக்கப்படும்.

டென்மார்க்—கனடா

ஆகிய நாடுகளுக்கு கொழும்பிலிருந்து நேரடிப் பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் எம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

INTERSUN GROUP,
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய். [A 729]



**பிரயாண ஒழுங்குகள்**

டென்மார்க் கனடா
(கொழும் பிலிருந்து நேரடிப் பிரயாணம்)
(ஜூலை 7ம் திகதி எமது முகவர் கூட்டிச் செல்வார்.)
உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

லிபியா குவைத்
சவூதி அரேபியா
ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.
அத்துடன்
பாஸ்போட், BOND, ரிக்கற்றிங்
ஆகியனவும் உடனடியாகச் செய்துகொடுக்கப்படும்.
தொடர்பு கொள்க:

டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்,
''பிரசாந்தி வைத்திய நிலையம்'',
கற்புகப் பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு.
(இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன் ஒழுங்கை) (C 3191)



**பிரயாண ஒழுங்குகள்**

டென்மார்க், கனடா

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)
ஜூலை 7ம் திகதி எமது முகவர் கூட்டிச்செல்வார்.
எமது காரியாலயத்தில் பதிவு செய்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

லிபியா குவைத்
சவூதி அரேபியா
ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.
அத்துடன்
பாஸ்போட், BOND, ரிக்கற்றிங்
ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

யூனிவேர்சல் ஏஜென்சி,
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்ரோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)
(A 757



**RADIO & TELEVISION ENGINEERING COURSE**

WEEKEND CLASSES - 6 MONTHS
RADIO
TAPE RECORDER
HI FI STEREO
AMPILIFIER
RADIO CONTROL
TRANSFORMER WINDING

ஆகியவற்றை பிறர் உதவியின்றி உருவாக்கவும் பழுதுபார்க்கவும்

TELEVISION
VIDEO TAPE DECKS

ஆகியவற்றை நவீன சாதனங்களைக்கொண்டு பழுதுபார்க்கும் அறிவினையும் பயிற்சியையும் எமது நவீன ஆய்வுகூடத்தில் பெற்று நவீன உலகின் தொழில்நுட்ப சாதனைகளுக்கு இன்றே உங்களைத் தயார்படுத்திக்கொள்ளுங்கள்,

விரிவுரையாளர்:- திரு. E. கணபதிப்பிள்ளை
ஆரம்பம்: 05-07-1986 — 10-00 மணி.
FEES:- Rs. 250/- per month.

CANTABIA INSTITUTE
21, MAIN STREET, JAFFNA.
PHONE: 24201. [A-748]



வெளிநாட்டில் வேலை தேடுவோருக்கு

**ஓர் அறிவித்தல்**

அப்ராஜ் என்ற பெயரின் கீழ் உள்ள ஒரே ஒரு அனுமதிக்கப்பட்ட ஆள் சேர்க்கும் ஏஜென்ஸி நிறுவனம் எம்முடையது மட்டுமே என்பதை பொது மக்களுக்கு அறிவிக்க விரும்புகின்றோம். இது பணியகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எமது அனுமதி இலக்கம் 78. எமது ஏஜென்ஸிக்கு இலங்கையில் உப ஏஜெண்டுகளோ அல்லது வேறு பெயரில் கிளைகளோ கிடையாது.

எல்லா நேர்முகப் பரீட்சைகளும் தெரிவுகளும் கீழ்வரும் விலாசத்தையுடைய அலுவலகத்திலேயே நடைபெறும்.

இரண்டாம் நபர்களால் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களுக்கு நாம் பொறுப்பாகமாட்டோம்.

அப்ராஜ்
45/2-3 சேர் சிற்றம்பலம்
ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு-2
[மின்சாரசபை எதிராக] [C3213]

## பணிவானவேண்டுகோள்

5-6-86ல் விசுவமடுவில் வைத்துக் கடத்தப்பட்ட 26 ஸ்ரீ 4688 இலக்கமுடைய லொறியில குவக் போட்டோ, கே. கே எஸ் ரோட், மெதல்லிப்பழை என விலாசமிட்ட கலர் புகைப்படப் பார்சல் ஒன்று அதில் உள்ளது. அப்புகைப்படங்கள் இல்லாதது எமக்கு பாரிய இழப்பாக உள்ளது. தயவுசெய்து புனித இயக்கங்கள் இதனை மீட்டு

திரு. ஆறுமுகம்,
பால் கடை,
விசுவமடு

என்றவிலாசத்திற்கு ஒப்படைக்கவும். [C3208]



## தேவை

சண்டிலிப்பாயில் தொழிற்சாலையொன்றில் வேலை செய்ய விரும்பும், ஒரு மைல் சுற்றளவுக்குள் வசிக்கும் 30 வயதுக்குட்பட்ட பெண்கள் 07-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

1. தொழிலாளர்கள்
(G.C.E. (O/L) சித்தியடைந்திருக்க வேண்டும்)
2. குழுத் தலைவர்
(G. C E: (A/L) அல்லது பல்கலைக்கழக / தொழில்நுட்பக் கல்வி)

விளம்பர எண் A 892,
மே/பா "ஈழநாடு",
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(A 892)



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி ஜனீத்தா

வண்ணார் பண்ணையைச் சேர்ந்த தயாபரன் - வசந்தா தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜனீத்தா தனது முதலாவது பிறந்தநாளை (2-7-86) இன்று தனது இல்லத்தில் சிறப்பாகக்கொண்டாடுகிறு.

இவரை அப்பா, அம்மா, அப்பம்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, லதாமாமி, அம்மப்பா, அம்மம்மா, பாஸ்கரன் மாமா, சித்திமார், உற்ருர், உறவின, நண்பர்கள் ஆகியோர் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் நீடூழி வாழவாழ்த்துகின்றனர்.

(C 3218)


## இன்றைய பலன்

மாதம்: ஆனி
திகதி: 18ம் திகதி 02.7 86
கிழமை: புதன்கிழமை
நட்சத்திரம்: பரணி
திதி: ஏகாதசி

மேடம்; உறங்கிக் கிடந்த பகை மீண்டும் தலைதூக்க ஆரம்பிக்கலாம் வீட்டிலும் சிறுபிணி தலைதூக்கும் அபாயகரமான தொழில் புரிவோர் அவதானம் வேண்டும்.

இடபம்: குடும்ப மேன்பாடு, குறிக்கோள் வெற்றியுமுண்டு. நீண்ட நாள் கனவு நனவாகும். சகல துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட வழியுண்டு.

மிதுனம்: சிறிய விடயத்தை முடிப்பதற்கும் அதிக பணத்தைச் செலவு செய்வீர்கள். கடன் படவும் நேரிடும். ஆசாரக் குறைவும் உண்டு. அவதானம் வேண்டும்.

கடகம்: உத்தியோக உயர்வுக்குமிடமேற்படலாம். பெரியோர் ஆசியுமுண்டு. சிறுக்த வாகன விருத்தியுமுண்டாம். சுபநாள்.

சிங்கம்: குடும்பத்திலும் மகிழ்ச்சிதென்படும். உயர் கல்விக்கும் உகந்த தினம். காதல் விவகாரங்களுக்குமிடமுண்டாம் புதிய தொழில்களிலும் முதலீடு செய்வார்கள்.

கன்னி: அவசரப் போக்கினுல் அடிசறுக்க நேரிடும் பிறர் விடயத்தில் தலையிடா திருக்கவும். அன்னிய வாசத்திற்குமிடமுண்டாம்.

துலாம்; பல வழிகளிலும் பணவரவுக்கிடமுண்டு. பெருமை தரும் சம்பவங்களும் இடம் பெறலாம். சிலருக்கு மண வாழ்க்கைக்கு அத்திவாரமிடப்படலாம்.

விருச்சிகம்: பொருள் விரயத்திற்குமிடமுண்டு. கடமையாயுமிடத்தில் கண் துடைப்பு வேலைகள் இடம் பெறும். பொறுமை அவசியம்.

தனுசு: பிதாவழிச் செய்திக்குமிடமுண்டு தொழிலில் சமவிருத்திக்குமிடமுண்டு இனசன மகிழ்ச்சிக்கும், இடயாற்றத்திற்குமிடமுண்டாம்.

மகரம்: மனைச் சிறப்பும் உண்டு மங்களகரமான நிகழ்ச்சிக்கும் இடமுண்டு தொழில் முயற்சிக்கும் நன்மையுண்டு. பொதுசன மதிப்புமுண்டு. நல்ல நாள்.

கும்பம்: பதவியுயர்வும் உண்டு பந்தபாசம் உங்களைப் பாவசப்படுத்தும். தனவரவிற்குமிடமுண்டு புதிய தொழிலும் ஈடேறும்.

மீனம்: உறவு முறைகளில் பிளவு ஏற்படலாம். டண விடயத்திலும் பகை தோன்றலாம். தொழில் துறையிலும் கவனம் செலுத்தவும்.

திருமலை ரவீந்திரன்

## உற்சவம்

யாழ்ப்பாணம், புதன் வட்டுக்கோட்டை வீரபத்திரர் சிவன் கோவில் ஆனி உத்தர உற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்து நாட்கள் உற்சவம் நடைபெற்று 12ம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் 13ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் 14ம் திகதி பூங்காவனமும் நடைபெறவுள்ளது.


வேண்டும் வரம் அருளும்

# புங்குடுதீவு

# அருள்மிகு அந்தோனியார் ஆலயத்திற்கு புனிதயாத்திரை



**4-7-86 வெள்ளி: பி. ப. 3-30 மணி**
கொடியேற்றம்: பூசை

**6-7-86 ஞாயிறு: காலை 8.00 மணி**
- விசேட பூசை நற்கருணைப்பந்தி
- அருள்மிகு அந்தோனியார் தேர்ப்பவனி

திருவிழாக் குருக்கள்

அருள் திரு. சாமிநாதன் பிரான்சீஸ் கிருபானந்தன் அடிகள்
அருள் திரு. T. தேவசகாயம்பிள்ளை அடிகள்

கொலைகள் அகலவும், விடுதலையும், சமாதானமும் கிட்டவும் இவ்விழாவில் பக்தர்கள் கூடிப் புனிதரிடம் வேண்டுமாறு அழைக்கின்றோம்.
புனிதரின் பேரால் அமையும் "தெய்வக்குழந்தைகள் இல்லத்திற்கு" உதவுமாறு அன்புடன் கோருகின்றோம்.

அன்பளிப்பு:

செரினு ஸ்ரோர்ஸ்
151, மலிபன் வீதி,
கொழும்பு - 11.

மில்க்வைற் தொழிலகம்
த. பெ. இல. 77
யாழ்ப்பாணம்.

எஸ். சவிரிமுத்து
73, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

டைமன் தேயிலை
டைமன் தொழிலகம்
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C 3183)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

புதன்கிழமை 2-7-86

## சாவகச்சேரியல் அகதிகள் தஞ்சம்

[கிளிநொச்சி, செவ்]

உருத்திரபுரம் அகதிமுகாமில் இருந்து வந்த சுமார் 20 குடும்பங்கள் இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சி கால்நடையாக வந்து சாவகச்சேரியில் கச்சாய்வீதியில் உள்ள வாசிகசாலை ஒன்றில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதேவேளை மேலும் பலர் கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதிகளை விட்டு வெளியேறிய வண்ணம் உள்ளனர். கிளிநொச்சிப் பகுதி சனநடமாட்டம் இன்றி தொடர்ந்து ஸ்தம்பித நிலையில் உள்ளது.

சர்வதேச நீதிமன்ற தீர்ப்பின்படி

# "நெடுமாறனை கைதுசெய்தால் தமிழகம் திரண்டு எழும்!"

### தமிழக சஞ்சிகை கூறுகிறது

சென்னை

"இலங்கை அதிபர் ஜெயவர்த்தன காமராஜ் காங்கிரஸ் தலைவர் நெடுமாறன் தனது நாட்டிற்குள் சர்வதேச விதிமுறைகளை மீறி நுழைந்தார் என்று சர்வதேச நீதிமன்றில் ஒரு வழக்குத் தொடர்ந்திருந்தார். அந்த வழக்கு விசாரணை முடிந்து நெடுமாறன் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது,

இனிநெடுமாறனைக் கைது செய்யச் சொல்லி சர்வதேச நீதிமன்றம் ஆணையிடும். அந்த ஆணையை நிறைவேற்ற வேண்டியபொறுப்பு இந்திய அரசாங்கத்தினுடையது.

"அப்படி நெடுமாறன்கைது செய்யப்பட்டால் தமிழகம் திரண்டு எழும். பல்வேறு பிரசனைகளை அதுகிளப்பும்."

சென்னையிலிருந்து வெளிவரும் 'தராசு' சஞ்சிகையில் வெளியாகியுள்ள கட்டுரையொன்று மேற்கண்டவாறு கூறுகின்றது.

அக் கட்டுரையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"சமீபத்திய சி. ஐ. ஏ. மற்றும் இண்டலிஜன்ஸ் ரிப்போர்ட்களின்படி பார்த்தால் இலங்கைக்கு இந்திய ராணுவத்தை அனுப்ப ராஜீவ்காந்தி தயாராகி விட்டார் என்றே தோன்றுகிறது.

"தமிழகம் பூராவுமுள்ள ஓய்வு பெற்ற ராணுவத்தினர் பலருக்கு உடனடியாக டெல்லிக்கு வருமாறு உத்தரவுகள் பறந்துள்ளன. பொதுவாக போர்க்காலத்தில் தான் இத்தகைய நடவடிக்கைகள் எடுப்பது வழக்கம். இப்பொழுது போர் முஸ்தீபுகள் எதுவும் அறிவிக்கப்படாதபோது, ஏன் இந்த துரித நடவடிக்கை என்று உயர்மட்டங்களில் கிசுகிசுக்கப்படுகிறது.

பஞ்சாப்பில் நிலவிவரும் நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவோ என்று முதலில் எண்ணப்பட்டது ஆனல் ஓய்வு பெற்ற ராணுவத்தினருக்கான இந்த அழைப்பு தமிழகத்தில் மட்டுந்தான் விடப்பட்டுள்ளது

"ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் தற்போது நடந்துவரும் 'உள்நாட்டு' போரில் விடுதலைப்புலிகளோடு சேர்ந்து ஓய்வுபெற்ற இந்திய [தமிழ்] இராணுவத்தினரும் சண்டையிடுகின்றனர் என்று இலங்கையிலுள்ள சில இதழ்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. அந்தச் செய்திகளை வைத்துப்பார்த்தால் அநேகமாக இலங்கைக்கு எதிரான ராணுவ நடவடிக்கையை ராஜீவ்காந்தி நேரிடையாக இலலாவிட்டாலும் மறைமுகமாவது எடுத்துவருகிறார் என்று தெளிவாகத் தெரிகிறது.

"சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்த காங்கிரஸ் பொதுச் செயலாளர் மூப்பனர் இதை மறுத்தாலும் மூப்பனருக்கு நெருங்கிய சிலர் இந்தச்செய்தி உண்மைஎன்றே உறுதிசெய்தார்கள்.

### 'புலி'களுக்கு ரஷ்ய ஆயுதங்கள்

பிரபாகரனின் விடுதலைப் புலி இயக்கத்துக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னல் 'ரஷ்யன் மேக' விமான எதிர்ப்புப் பீரங்கிகள் வழங்கப்பட்டுள்ளன."

கடந்த இரண்டு தினங்களில் தமிழகத்தல பல உளவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அனைவருமே இலங்கை உளவாளிகள் தான். இந்திய ராணுவத்தின் இரகசியத் தகவல் பிரிவு கொடுத்த கட்டளைகளின்படி இந்த நடவடிக்கை மேற்கொளளப்பட்டுள்ளது. இந்தக் கைதுகள் நடந்த சமயத்தில் தி. மு. க. உறுப்பினரும், இலங்கையில் தி. மு. க. இயங்கியபோது அதன் நிர்வாகிகளில் ஒருவராகச் செயலாற்றிவருமான ஏ. எஸ் மணவைத் தம்பியையும் தமிழ்நாடு காவல் துறையினர் கைது செய்துள்ளனர். தமிழகத்திலுள்ள பல்வேறு ஈழ விடுதலை இயக்கங்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர் மணவைத் தம்பி.

தமிழகத்தில் எடுக்கப்பட்டு வரும் இந்த வேகமான நடவடிக்கைகளைப் பார்க்கும் போது ராஜீவ்காந்தி இலங்கைக்கு எதராக உறுதியான நடவடிக்கைகளை மேறகொள்ளத் துணிந்துவிட்டார் என்றே தோன்றுகிறது.

## மரண அறிவித்தல்

### திரு. P. செல்வநாயகம்

சுன்னகம் [சிறிதேவி நகைமாளிகை உரிமையாளர்] பொன்னம்பலம் செல்வநாயகம் 01 - 07 - 86ல் காலமானர். இவர் மாதகலை பிறப்பிடமாகவும், சுன்னகம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டவர். அன்னர் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், சிறிதரன், முரளிதரன், காயத்திரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். ஈமக்கிரியைகள் இன்று (02-07-86) புதன்கிழமை பி ப. 1 00 மணியளவில் Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னகத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்: எஸ். ஜெயக்குமார்.
சுன்னகம் மேற்கு.
சுன்னகம்.

[C3226]

### செல்வன் பொன்னம்பலவாணர் நகுலபாஸ்கரன்

[Year 12 D யாழ். இந்துக்கல்லூரி]

அகால மரணமானர்

செல்வன் பொன்னம்பலவாணர் நகுலபாஸ்கரன் அகாலமரணமானர். இவர் திரு திருமதி பொன்னம்பலவாணர் [வருமானவரி உத்தியோகத்தர், கொழும்பு] நாகேஸ்வரி தம்பதிகளின் புதல்வனும் வித்யபாஸ்கரன் (யாழ் இந்துக்கல்லூரி) அன்பரசி, சுந்தரமலர் [சாவகச்சேரி இந்துக்கல்லூரி] செந்தாமரை [மீசாலை வீரசிங்கம் ம. வித்தியாலயம்] ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னரின் இறுதிக்கிரியைகள் 1986 - 07 - 02 [இன்று] புதன்கிழமை காலை 9-30 மணிக்கு சாவகச்சேரி நகரமயானத்தில் நடைபெறும். அனைவரும் இதனை ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை தெற்கு, மீசாலை.

[C-3224]

### கந்தையா வைரமுத்து சபாரத்தினம்

கந்தையா வைரமுத்து சபாரத்தினம் 30-6-86 அன்று காலமானர். [முன்னள் றோயல்கல்லூரி கொழும்பு இந்துக்கல்லூரி இரத்மலானை ஆசிரியர் ஆவார்.] அன்னர் கிறேஸ் புஸ்பரத்தினத்தின் அன்புக் கணவரும், குலம் சாம். மஞ்சுளா, காலஞ்சென்ற யோகன். சத்தி, ஜஸ்மினி. செல்வன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தி, ஜீவா, எலின, ஜோன் ஆகியோரின் அன்பு மாமனரும், ஜெயா, பிரதீப், நட்டாலி, சர்மிலி. நிரோஷனி, ஷேன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார் நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

35/1. றக்காலேன்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மகன் குலம்.

[C 3227]

### அருட் சகோதரி பேணடேற் குலாஸ் அவர்களின் அடக்கச் சடங்கு

திருச்சிலுவைச் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி பேணடேற் குலாஸ் அவர்களின் அடக்கச்சடங்கு இன்று (02-07-86) மாலை நடைபெறும். இவர் வங்காலையைச் சேர்ந்த மிக்கேல் குலாஸ் (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்) அவர்களினதும், றோசலீன் மொறாய்ஸ் அவர்களினதும் அன்புப் புதல்வியாவர். அன்னரின் பூதவுடல் யாழ். புனித மரியாள் தேவாலயத்தில் மாலை 3 மணிக்கு வந்துசேரும். யாழ். ஆயரின் கூட்டுத் திருப்பலி 4 மணிக்கு ஆரம்பமாகும், தொடர்ந்து நல்லடக்கம் இடம்பெறும்.

திருச்சிலுவைக் கன்னியர்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

[C-3232]

## மஹோற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம் புதன்,

சுன்னகம் மயிலிணி கந்தசுவாமி கோயில் மகோற்சவம் இன்று ஆரம்பமாகின்ற தொடர்ந்து12 தினங்கள்நடைபெறும் இத்திருவிழாவில் 12ம் திகதி தேர் உற்சவமும் 13 ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

## முதுமானி தேர்வில் சித்தி

யாழ்ப்பாணம் புதன்

யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. திருநாவுக்கரசு கமலநாதன் நேற்று வெளியான யாழ். பல்கலைக்கழக முதுமானித் தேர்வுப் பெறுபேற்றில் சித்தியெய்தியுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கமலநாதன் யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றுவதுடன் யாழ். கல்வித்திணைக்கள சமூகக் கல்வி ஆசிரிய ஆலோசகராகவும் பணிபுரிகின்றார். (மா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

## கோப்பாயில் பலியான மாணவன்



யாழ்ப்பாணம்,புதன்

நேற்று முன்தினம் கோப்பாய் கைதடி பாலத்தருகே ஹெலிகொப்டர் சூட்டில் பலியான 18 வயது மாணவன்பொ. நகுலபாஸ்கரன் 3- 8 - 68 இல் பிறந்த இவர் மீசாலையைச் சேர்ந்தவர் யாழ். இந்துக் கல்லூரியின் உயர் வகுப்பு மாணவரான இவர் வீடு செல்லும் வழியில் தாக்குதலுக்குள்ளானர்.

பாடசாலைகளை மூடி

## அஞ்சலி செலுத்தும்படி ரெஸோ வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்

நேற்றுமுன்தினம் பாடசாலை முடிந்து செல்லும் வழியில் ஹெலிகொப்டரில் வந்த இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான யாழ். இந்துக்கல்லூரியின் உயர்வகுப்பு மாணவனும், தமிழீழ மாணவர் பேரவையின் வாரியச் செயலாளருமான பொன், நகுலபாஸ்கரன் [விமல்] என்பவருக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளையும் இன்று பகல் 11 மணியுடன் முடுமாறு 'தமிழீழ மாணவர் பேரவை' வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவரது சடலம் இன்று 9 மணியளவில் மீசாலையிலுள்ள அவரது வீட்டிலிருந்து 'தமிழீழ மாணவர் பேரவை' யினரால் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும், பின்னர் கண்டி வீதிவழியாகச் சென்று சாவகச்சேரி நகரமைதானத்தில் இறுதிக்கிரிகைகள் நடைபெறும்.

[மா]

## ஆசிரியர்கழகம் பழையமாணவர் கண்டனம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். இந்துக்கல்லூரி உயர்தரவகுப்பு மாணவன் பொ. நகுலபாஸ்கரன் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியாணதைஒட்டி யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர்கழகமும் பழைய மாணவர் சங்கமும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதுபோன்ற நிகழ்வுகள் மேலும்தொடராமல் இருக்க ஆவனசெய்யுமாறு வடமாநில கல்விப்பணிப்பாளர் யாழ் அரசாங்க அதிபர்ஆகியோருக்கு ஆசிரியர் கழகமும் பழைய மாணவர் சங்கமும் வேண்டுகோள் விடுத்து மகஜர்கள் அனுப்பிவைத்துள்ளன.

மாணவனின் மரணத்தையொட்டி நேற்றுக்காலை யாழ் இந்துக்கல்லூரியில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றதுடன் காலை 11 மணியுடன் கல்லூரி மூடப்பட்டது.

[மா]

## ஒத்திவைப்பு

(உடுவில், செவ்)

ஆறும் ஆண்டுக்கு ஜூலை மாதம் 12-ம் திகதி நடைபெற இருந்த புலமைப்பரிசில் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 2-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.

## இராணுவம் குவிப்பு!

அச்சுவேலி, செவ்வாய்

தொண்டமானறு இராணுவ முகாமின் பலத்தை அதிகரிக்கும் நோக்குடன் அங்கு பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்படுகின்றனர் பலாலி முகாமில் இருந்து கால்நடையாகத் தொண்டமானறு சென்றஇராணுவத்தினர் தொண்டமானற்றில் இருந்து திரும்பிச் செல்லாதமையால் மக்கள் மத்தியில் பெரும் அச்சம் நிலவுகின்றது.

அத்துடன் அடிக்கடி தொண்டமனறு முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுவதும், ஹெலிகாப்டர் ரோந்து என்பன மேலும் பதற்றத்தைஅதிகரித்துள்ளது.